# பண்ணுருட்டி நகராட்சி

## மன்ற கூட்ட அழைப்பிதழ்

*************

பண்ணுருட்டி நகரமன்றத்தின் **சாதாரண கூட்டம்** விசுவாவசு **வருடம்** தமிழ் மாதம் **மார்கழி 24**, நாள் **08.01. 2026** வியாழன் கிழமை **நேரம்** காலை **11.00** மணிக்கு, நகராட்சி அலுவலகத்திலுள்ள **"பேரறிஞர் அண்ணா மன்ற கூடத்தில்"** நடைபெறவுள்ளது.

அவ்வமயம் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.

**பண்ணுருட்டி நகராட்சி**

பண்ணுருட்டி நகராட்சி நகரமன்ற **சாதாரண கூட்டம்** 08-01-2026-ந் தேதி வியாழன் கிழமை காலை **11.00** மணிக்கு பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள **"பேரறிஞர் அண்ணா"** மன்ற கூடத்தில் நடைபெறும் **சாதாரண கூட்டத்திற்கு** நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.

1. பண்ணுருட்டி நகராட்சி ஆணையர் அவர்களின் டிசம்பர் 2025-ம் மாதத்திற்கு நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது
   அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்
2. பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து பணிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் தூய்மைப்பணியாளர் திருமதி. சிவகாமி க/பெ செல்வராஜ் என்பவர் பணிநீக்கம் உத்திரவினை எதிர்த்து கடலூர் தொழிலாளர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் ID.4/2016 W.A.No.3591/2025, 3115/2017 ஆட்சேபனைக்குரிய தீர்ப்பு தொடர்பான பதிவுகளை கோரியதில் வருகின்ற 12.01.2025 வரை தடையாணை உத்திரவு பெற்றதற்கான வழக்கிற்கு வாதாடிய அரசு கூடுதல் வழக்கறிஞர் சென்னை அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.
   அலுவலக குறிப்பு:
   1. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
   2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (கோப்பு எண்.4180/2010/எச்1)
3. தமிழ்நாடு பூங்கா, விளையாட்டு திடல் மற்றும் திறந்த வெளியிடம் (பாது காத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1959-ன்படி, பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குள், நகர் ஊரமைப்பு துறையின் மூலம் ஒப்புதல் செய்த மனைப் பிரிவில் உள்ள பூங்கா, திறவிடம் மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற மொத்தம் 97 எண்ணிக்கையிலான இனங்களை (பூங்கா 82 விளையாட்டு மைதானம் 5, திறவிடம் 10 ) நகராட்சி நிர்வாக இயக்குநரக, நகரமைப்பு பிரிவு துணை இயக்குநர் மற்றும் பிரிவு உதவி பொறியாளர் சென்னை அவர்களின் தொலைபேசி வழி தகவல் நாள் 09.12.2025-ன்படி பூங்கா, விளையாட்டு மைதானம் மற்றும் திறந்த வெளியிடம் பட்டியலை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட பட்டியல் சமர்பிக்க தெரிவித்துள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
   அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
   (கோ.எண்: 1125/2025/F1)
4. அரசாணை (நிலை) எண்.77 பள்ளிகளில் (ப.க.4(1)தீ துறை நாள்.13.04.2015ன் படி அரசு மற்றும் நகராட்சி பள்ளிக்கழிவறைகள் மற்றும் வளாகம் சுத்தம் செய்யும் பணிக்கான ஒப்பந்தம் 31.12.2025-ல் முடிவடைந்துள்ளதால் 01.01.2026 முதல் 31.12.2026ம் ஆண்டிற்கு தனியார் வசம் ஒப்படைத்து பணி மேற்கொள்ளவும் ஒப்பந்த புள்ளி கோரவும் அதற்கான செலவின மதிப்பீடு ரூ.25/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
   அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
   2.இச்செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
   (கோப்பு எண்.1684/2023/எச்1)

5. மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்: வி8/2569424/2025 நாள்: 09.10.2025–ம் தேதிய கடிதத்தில் பண்ணுருட்டி வட்டம், திரு.பத்மநாபன் த/பெ தேவநாதன் என்பவர், வார்டு–B , பிளாக்–15, நகரளவு எண்:33 மற்றும் 34–ல் 00291 ச.மீ மற்றும் 00300 ச.மீ இடம் திரு.மோகன் மனைவி சௌந்தரியம்மாள் பெயரில் தனி பட்டாவாக உள்ளது. மேற்படி புல எண்களை கணினியில் பதிவேற்றம் செய்ததில் சர்க்கார் புறம்போக்கு என தவறுதலாக பதிவாகி உள்ளதாகவும் அதனை திருத்தம் செய்ய நகர் மன்ற தீர்மானம் இயற்றி அதன் நகலை அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரசார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் 05.01.2026–ம் தேதிய குறிப்பில் வார்டு–B, பிளாக்–15, TS.NO: 33–ல் 00291–ச.மீ, மற்றும் TS.NO:34–ல் 00300–ச.மீ பரப்பளவு இடம் சர்க்கார் புறம்போக்கு என உள்ளதை திரு.மோகன் மனைவி சௌந்தரியம்மாள் பெயருக்கு வகைபாடு மாற்றம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்டவாறு மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்:2102/2025/F1)

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பண்ணுருட்டி வட்டம்–திருவதிகை கிராமம், வார்டு C, பிளாக் 17, நகரளவு எண். 5/1A,5/1B பழைய சர்வே எண்.866 pt, 881, 883–ல் 2.89 ஏக்கர் (117.00 ச.மீ) இடத்தில் குடியிருப்பு மனைப் பிரிவு அமைக்க உத்தேசித்து முழுமை திட்டத்தில் எதிர்கால மேம்பாட்டு பயன்பாட்டு பகுதியாக (FUTURE DEVELOPMENT USE ZONE) உள்ளதை குடியிருப்பு பகுதியாக மாற்றித்தர திருமதி.L. அந்தோணிமேரி மற்றும் திருமதி. A.ஜாக்குலின் பண்ணுருட்டி என்பவர்கள் விண்ணப்பித்துள்ளார். மேற்படி இடம் நகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முழுமை திட்டத்தில் எதிர்கால மேம்பாட்டு பயன்பாட்டு பகுதியாக (FUTURE DEVELOPMENT USE ZONE) உள்ளது. எனவே நிலம் பயன்பாடு மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை மற்றும் ஆலோசனை ஏதும் அளிப்பதாக இருந்தால் 30 நாட்களுக்குள் எழுத்து பூர்வமாக நகராட்சி ஆணையர், பண்ணுருட்டி அவர்களுக்கு தெரிவிக்குமாறு கடந்த 11.11.2025 அன்று தினத்தந்தி தமிழ் நாளிதழ் மற்றும் Buisnees Standard என்ற ஆங்கில தினசரி நாளிதழ்களிலும் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்ட நிலம் பயன்பாடு மாற்றம் தொடர்பாக விளம்பரம் செய்யப்பட்டு 30 தினங்கள் கடந்த நிலையில் ஆட்சேபனை ஏதும் வரப்பெறவில்லை. எனவே எதிர்கால மேம்பாட்டு பயன்பாட்டு பகுதியா (FUTURE DEVELOPMENT USE ZONE)உள்ள நிலத்தின் பயன்பாட்டினை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்திட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்:1535/2025/F1)

7. இந்நகராட்சியின் உபயோகத்திற்கு தேவையான பதிவேடுகள் மற்றும் A4 பேப்பர், LEGAL பேப்பர் போன்ற அலுவலக பயன்பாட்டிற்கு வாங்குவதற்கு உத்தே செலவு ரூ.10.00 (பத்துலட்சம் மட்டில் ) மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.532/2023 சி1

8. பண்ணுருட்டி நகராட்சி – நகரமன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் (TN31CS5146) முழு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டதற்கு Schangalaya Motors என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 36,550– யை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையை நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோ. எண். 1320/2025/இ1)

9. குடிநீர் நிதி 2025–26ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் பல்வேறு கொள்ளளவுடன் கொண்ட 18 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், 39 நேரடி நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் 20 சிறுமின்விசை பம்புகள் ஆகியவற்றிற்குண்டான கேபிள்கள், நீர்மூழ்கி மோட்டார்கள், ஸ்டார்ட்டர், Panel Board, 80mm, 100mm விட்டமுள்ள G.I குழாய்கள் மற்றும் இதர மின் உதிரி பாகங்கள் ஆகியவற்றை பராமரித்து பொது மக்களுக்கு சீரான மற்றும் பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்ய ரூபாய்.10.00/– இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.950 நாள்.17.10.2025 அனுமதி வழங்கியதற்கிணங்க 05.12.2025–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி சதவீதம் ( மதிப்பீட்டை விட ) |
|---|---|---|---|
| 1. | S.ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM | 10.00 | – 0.04 % சதவிகிதம் குறைவு |
| 2. | M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI | 10.00 | 0.55% சதவிகிதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:–

1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் S.ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டை விட –0.04% சதவீதம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண். 1525/இ1/2025)

10. பண்ணுருட்டி நகராட்சி – தமிழக அரசின் நான்கு ஆண்டு சாதனைகள் 2021-25 க்கான வளர்ச்சி திட்டப்பணிகளின் விபரத்தை தினகரன் நாளிதழில் நாள்.13.06.2025 அன்று செய்தி வெளியிடப்பட்டதற்கு (Kal Publication (P) LTD) நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.35,000/- யை தொகை மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையை நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோ. எண். 2167/2025/இ1)

11. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய்நிதி 2025–26ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட தூய்மைபணியாளர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவங்கப்படவுள்ள முதலமைச்சரின் உணவு திட்டத்தின் கீழ் தூய்மை பணியாளர்கள் பணிபுரியும் இடத்திற்கு அருகில் உணவு வழங்க (வார்டுஎண் 2 பண்ணுருட்டி நகராட்சி அலுவலகம்,வார்டுஎண்1அருள்ஜோதி நகர், வார்டுஎண்6காந்தி பூங்கா வார்டு அலுவலகம், வார்டுஎண்20அம்மா உணவகம்வார்டுஎண்31லட்சுமிபதி நகர், அறிவுசார் மையக் கட்டிடம், வார்டுஎண்15வீரட்டானேஷ்வர் கோவில் அருகில் உள்ள நகராட்சி இடம்)ஆகிய6 இடங்களில்தூய்மை பணியாளர்கள் உணவு அருந்தியபின் கைகழுவுவதற்கு ஏதுவாக கைகழுவும் கோப்பை (Wash Basin) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் (R.O) அமைக்கும் பணிக்கு மதிப்பீடுதொகை ரூ.5.90/– இலட்சத்திற்கு பெறப்பட்ட தங்களது குறைந்தவிலைப் புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு – 57(7)இன் கீழ் தொடர்ந்து முடிக்க உள்ளூர் விலைபுள்ளிக் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது விபரம் வருமாறு.

| SL.No | விலைப்புள்ளித்தாரர் | மதிப்பீடுதொகை |
|---|---|---|
| 1. | M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI | 491289.00 |
| 2. | S.ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM | 494849.00 |
| 3. | RDR CONSTRUCTION NO.2 RAMASAMY STREET, PANRUTI | 497066.00 |

மேற்படி, மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து அளிக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை மேற்கொள்ள அனுமதித்ததையும் மேற்படி தங்களது குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022, பிரிவு – 57(7) கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு:–

1. இப்பணிக்கான குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு. M. பார்த்திபன் என்ற ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் நகராட்சிகளின் சட்ட விதிகள் 2022, பிரிவு – 57(7) ன் கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மன்றம் பதிவு செய்யலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண்.1525/2025/இ1)

12. பண்ணுருட்டி நகராட்சி பொறியியல் பிரிவில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் கள ஆய்வு செய்யவும், அவற்றின் பணி முன்னேற்ற அறிக்கை அலுவலக தட்டச்சு பணிக்கு போதிய நபர்கள் இல்லாத காரணத்தினால் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றிய வெளிக்கொணர்வு முகமையில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை எடுத்துக்கொண்டு பணியாட்களை சப்ளை செய்யும் நிறுவனத்திற்கு EPF + ESI + GST மற்றும் அவர்களின் சேவை கட்டணம் ஆகியவை சேர்த்து வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில் 7 திட்டங்களின் கீழ் 22 பணிகள் சுமார் 96.43 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருவதால் அதற்கான ஊழியர் விவரம் கீழ்க்கண்டவாறு தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | தொழில் நுட்ப உதவியாளர் நிலை –I | = 1 நபர் |
| 2) | கணிணி இயக்குபவர் | = 1 நபர் |
| 3) | ஓட்டுநர் | = 2 நபர் |
| | **மொத்த பணியாளர்கள்** | **= 4 நபர்கள்** |

மேற்படி பணியாளர்களை இந்நகராட்சியில் இயங்கிவரும் நகர்புற வாழ்வாதார மையத்தில் (CLC) 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு விதிகள் (விதி 8யை பார்க்க) 1975ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/1975 பிரிவு 10) கீழ் பதிவுபெற்ற வேலையில்லா பட்டதாரிகள் மற்றும் பணியாளர்கள் பட்டியலில் இருந்து தகுதியான நபர்களை கேட்டுப்பெற அனுமதிக்கலாம். இதன் மூலம் பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் + EPF + ESI மட்டும் கூடுதலாக வழங்கினால் போதுமானது. எனவே தன்னார்வலர் குழு **மகிழம்பூ** குழு மூலம் தகுதியான பணியாளர்களை பெற்று அவர்களுக்கு ஊதியம் மூலம் பொதுப்பணி துறையின் தரப்படுத்தப்பட்ட விலைவிகிதம் (அல்லது) அவற்யில் இல்லாத இனங்களுக்கு மாவட்ட ஆட்சியரின் உள்ளூர் தரப்படுத்தப்பட்ட விலைப்புள்ளி அடிப்படையில் ஒருவருட காலத்திற்கு பணி செய்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.22.60/– இலட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மேற்கண்ட பணிக்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ. 22,60000/–க்கு (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்தி அறுபதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணியாளர்கள் நகர்புற வாழ்வாதார மையத்தில் (CLC) 1978 ஆம் ஆண்டு தன்னார்வலர் குழு மகிழம்பூ மூலம் தகுதியான பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண். 2378/2025/இ1)

13. பண்ணுருட்டி நகராட்சி வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண் 29 கெடிலம் ஆற்றில் 19.01.2025 அன்று நடைபெறவுள்ள ஆற்றுத் திருவிழாவில் சாமி சிலைகள் நிற்பதற்கு ஏதுவாகவும், கெடிலம் ஆற்று படுகையினை சீர் செய்திடவும், சமப்படுத்திடவும், சாமிகள் நிற்பதற்கு கொட்டகைகள் அமைத்திடவும், வரும் பொதுமக்கள், பக்தர்களுக்கு ஆண்/பெண் தனித்தனியே தற்காலிக கழிப்பிடம், குடிநீர் வசதி மற்றும் மின் வசதி, சாலை சீரமைத்தல் ஆகிய பணியினை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் , ஆணையாளர் மற்றும் பொறியாளர் அறிவுரையின் படி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ 5.80/– இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

14. பண்ருட்டி நகராட்சி – ஆணையாளர் பொலிரோ ஈப்பு வாகனம் மற்றும் நகரமன்ற தலைவர் ஸ்கார்ப்பியோ ஈப்பு வாகனம் TN31CS–5260 மற்றும் TN31– CS 5146 என்ற இரண்டு ஈப்பு வாகனத்திற்கு காப்பீடு முடிவடைகிறது. எனவே அதனை புதுப்பிக்க ஆணையாளர் ஈப்பு வாகனம் TN31CS–5260 த்திற்கு ரூ.17,458/–ம் நகரமன்ற தலைவர் ஈப்பு வாகனம் TN31– CS 5146 த்திற்கு ரூ.45,137/–ம் மேற்கண்ட இரண்டு ஈப்பு வாகனத்திற்கு கூடுதல் தொகை ரூ. 62,595/– தொகையை UNITIED INDIA INSURANCE என்ற நிறுவனத்திற்கு தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவின தொகை ரூ. 62,595/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையை நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

15. பண்ணுருட்டி நகராட்சி தமிழக அரசு திட்டங்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்ற திட்ட பணிகள் குறித்த சாதனைகளை விளக்கும் வகையில் துண்டு பிரசுரங்கள் 1200 எண்ணிக்கையும், மல்டிகலர் நோட்டீஸ்கள் 25000 எண்ணிக்கையும் தயார் செய்து பொதுமக்களுக்கு வழங்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) கொள்முதல் செய்யும் பணிக்கு பெறப்பட்ட தங்களது குறைந்தவிலைப் புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு – 57(7)இன் கீழ் தொடர்ந்து முடிக்க உள்ளூர் மற்றும் வெளியூர் விலை புள்ளிக் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது விபரம் வருமாறு.

| SL.No | விலைப்புள்ளித்தாரர் | தொகை |
|---|---|---|
| 1. | **The Thoothukudi District HI-TECH PRINTING and ALLIED SERVICE INDUSTRIAL CO-Operative Society LTD** | **4,92,060.00** |
| 2. | **Kovilpattti<br>Small Scale Industries Service Industrial CO-Operative Society LTD** | **5,02,975.00** |
| 3. | **Tirunelveli District Multi Purpose Service Industrial Co-Operative Society LTD** | **5,13,890.00** |

மேற்படி, மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **The Thoothukudi District HI-TECH PRINTING and ALLIED SERVICE INDUSTRIAL CO-Operative Society LTD** என்ற நிறுவனத்திடமிருந்து அளிக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை மேற்கொள்ள அனுமதித்ததையும் மேற்படி தங்களது குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022, பிரிவு – 57(7) கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

அலுவலக குறிப்பு:–

1. இப்பணிக்கான குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **The Thoothukudi District HI-TECH PRINTING and ALLIED SERVICE INDUSTRIAL CO-Operative Society LTD** என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் நகராட்சிகளின் சட்ட விதிகள் 2022, பிரிவு – 57(7) ன் கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மன்றம் பதிவு செய்யலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

16. பொது நிதி – 2025–26 நிதியின் கீழ் நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் பொதுமக்களின் பங்கேற்புடம் பண்ணுருட்டி நகராட்சியில் 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தினங்களில் 1 முதல் 33 வரை உள்ள வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்களில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள

| வ. எண் | வார்டு எண் | பொருள் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 1 | ஜாகீர் உசேன் தெரு சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணி | 4.00 |
| 2. | 8 | பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி சிதிலமடைந்து உள்ளதால், புணரமைக்கும் பணி | 8.50 |
| 3. | 3 | வ.உ.சி இரண்டாவது பிரதான சாலையில் உள்ள பழுதுகளை சீரமைக்கும் பணி | 18.00 |
| 4. | 5 | மாரியம்மன் கோவில் தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணி | 3.30 |
| 5. | 15 | வீரடானேஷ்வரர் கோவில் தெருவில் மழைநீர் கால்வாய் அமைக்கும் பணி | 9.00 |
| 6. | 18 | நகராட்சி நடுநிலை பள்ளிக்கு அருகில் மழைநீர் கால்வாய் கவர் சிலாப் அமைக்கும் பணி | 4.40 |
| 7. | 24 | எம்.ஜி.ஆர் நகரில் சாலை அமைக்கும் பணி | 4.50 |
| 8. | 6 | அம்பேத்கர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி 40 ஆண்டுகள் பழமையாக உள்ளதால், அதனை பராமரிக்கும் பணி | 0.25 |
| 9. | 25 | காந்தி ரோடு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 12.00 |
| 10. | 16 | பஜனைமடத் தெருவில் வடக்கு தெரு, தெற்கு தெரு, மேற்குத் தெரு ஆகிய சாலைக்கும் பணி | 4.50 |
| 11. | 9 | சேர்மேன்மணி நகருக்கு தார் சாலை அமைக்கும் பணி | 8.00 |
| 12. | 17 | போலீஸ்லைன் 7வது தெரு மற்றும் தண்டுபாளையம் பகுதியில் புதிதாக சின்டக்ஸ் டேங்க் அமைக்கும் பணி | 0.30 |
| 13. | 9 | கௌசல்யா நகருக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 4.90 |
| 14. | 32 | சீரங்குப்பம் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி பழுதுநீக்கம் செய்து, புணரமைக்கும் பணி | 7.00 |
| 15. | 4 | ஐயனார் கோவில் பகுதியில் சாலை அமைக்கும் பணி | 6.70 |
| 16. | 4 | பகுதியில் புதிதாக இரண்டு சின்டக்ஸ் டேங்க் அமைக்கும் பணி | 2.50 |
| 17. | 33 | டி.இராசாபாளையம் பகுதியில் பேருந்து நிருத்தம் அமைக்கும் பணி | 12.00 |
| 18. | 33 | டி.ராசாபாளையம் சுடுகாட்டுப்பாதை சீர் அமைக்கும் பணி | 8.00 |
| 19. | 3 | தர்கா வண்டிமேடு நகராட்சி தொடக்கப்பள்ளியின் முதல் தளத்தில் மாணவர்களின் பாதுகாப்பிற்காக எம்.எஸ். கிரில் அமைக்கும் பணி | 2.10 |
| 20. | 28 | அய்யனார் கோவில் தெருவில் அமைந்துள்ள அங்கன்வாடி பள்ளி கட்டிடத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பணி | 2.50 |
| 21. | 2 | பிள்ளையார் கோவில் தெருவல் சிமெண்ட் சாலை பழுதடைந்துள்ளதை சீர் செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பணி | 3.00 |
| 22. | 6 | அம்பேத்கர் நகர் மேட்டுத் தெரு விடுபட்ட பகுதி முழுவதும் சாலை அமைக்கும் பணி | 9.80 |
| 23. | 27 | மூப்பனார் நகர் பகுதியில் உள்ள பூங்கா பராமரிக்கும் பணி | 10.00 |
| 24. | 26 | கொக்குபாளையம் ரோடு முத்தையா நகர் (Health sub Centre Campus) பகுதியில் சுற்றுச்சுவர் மற்றும் பேவர்பிளாக் அமைக்கும் பணி | 31.00 |
| | | **மொத்தம்** | **176.25** |

மதிப்பீடு தொகை ரூ.176.25/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(கோ. எண். 1547/2025/இ1)

17. பண்ணுருட்டி நகராட்சி பழைய பேருந்து நிலையம் மேம்பாட்டு பணிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு நிதி 2024–25ன் கீழ் கடைகள் கட்டும் பணிக்கு 08.10.2024 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு சாலை அமைக்கும் பணி, பேருந்து நிறுத்தும் வழிதடம் மற்றும் இதர பணிகளுக்கு உள்ள நிலையில் தற்போது பேருந்து நிலைய கிழக்கு பகுதியில் கடைகள் கட்டும் பணி மட்டும் நடைபெற்றுவருகின்றது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் 26.10.2025 அன்று நேர் ஆய்வு மேற்கொண்டதில் பேருந்து போக்குவரத்து காரணமான பேருந்து நிலையம் மேம்பாட்டு பணிகள், முழுவீச்சில் நடைபெறாமல் மிகவும் மந்தமாக நடைபெற்று வருவதால், மேற்படி பணிகள் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரும் வகையில் போர்கால அடிப்படையில் பணிகள் அனைத்தும் முழுமையாக விரைந்து முடிக்க பேருந்து நிறுத்தம் வழித்தடம் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள் அறிவுறுத்தப்பட்டன.

மேற்கண்ட பணி ஆய்வின் போது நகராட்சி மண்டல இயக்குநர், மண்டல செயற்பொறியாளர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களும் பண்ணுருட்டி நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களும் உடன் இருந்தார்கள். மேற்படி பணி விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஏதுவாக மேற்கண்ட பேருந்து நிறுத்துவதற்கு தற்காலிகமாக மாற்று இடம் தேர்வு செய்திட நகர்மன்ற தலைவருடன் ஆய்வு செய்யப்பட்டது. பண்ருட்டி தாலுக்கா அலுவலகம் செல்லும் சாலையில் உள்ள நகராட்சி இடத்தில் தற்காலிக பேருந்து நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டது.

மேற்படி தற்காலிக பேருந்து நிலையத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் குடிநீர் வசதி, தற்காலிக பயணிகள் நிழற்குடை, தற்காலிக கழிப்பிட வசதி, தெருவிளக்கு வசதி மற்றும் பேருந்து நிறுத்த சாலைவசதி செய்து பேருந்துக்கள் அனைத்தும் தற்காலிகமாக பேருந்து நிலையத்திற்கு மாற்ற கீழ்க்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணி | தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தற்காலிக சாலைப் பணிகள் கிழக்கு பகுதி | 19.00 |
| 2 | தற்காலிக சாலைப் பணிகள் தெற்கு பகுதி | 29.00 |
| 3 | தற்காலிக பேருந்து நிறுத்தம் | 7.50 |
| 4 | தற்காலிக குடிநீர் வசதி | 2.60 |
| 5 | தற்காலிக தெருவிளக்கு வசதி | 5.50 |
| 6 | தற்காலிக கழிப்பறை வசதி | 7.70 |
| | **மொத்தம்** | **71.30** |

மதிப்பீடு தொகை ரூ. 71.30/. இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவின தொகை ரூ71.30/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட தொகையை நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோ. எண். 2167/2025/இ1)

18. பண்ணுருட் நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 14 எம்.ஜி.ஆர் நகர் மெயின் தெருவில் உள்ள மழைநீர் வடிகால் பாதி உடைந்தும் மீதம் உள்ள பகுதி மழைநீர் வடிகால் இல்லாமலும் மழை காலங்களில் மழைத்தண்ணீர் அந்த பகுதிகளில் உள்ள வீடுகளில் புகுந்து பொதுமக்களுக்கு மிகவும் சிரமாக உள்ளதால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 14.20/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

19. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 07 ராசி நகர் மெயின் தெரு, முதல் குறுக்குத் தெரு மற்றும் 2வது குறுக்குத்தெரு ஆகிய பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் பாதி உடைந்தும் மீதம் உள்ள பகுதி மழைநீர் வடிகால் இல்லாமலும் மழை காலங்களில் மழைத்தண்ணீர் அந்த பகுதிகளில் உள்ள வீடுகளில் புகுந்து பொதுமக்களுக்கு மிகவும் சிரமாக உள்ளதால் மழைகாலங்களில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 8.90/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

20. பண்ணுரு நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 07 பகுதியில் உள்ள சமூதாயக்கூடத்திற்கு மேசை, நாற்காலி, சமையலறை மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளுக்கு GI Sheet அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 7.90/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

21. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய்நிதி 2025–26ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2 விழமங்கலம் நகராட்சி துவக்கப்பள்ளி பகுதியில் உள்ள சத்துணவு மையம் சிறுபழுது நீக்கம் (Minor Repair) செய்யும் பணிக்கு மதிப்பீடுதொகை ரூ.0.10/– இலட்சத்திற்கு பெறப்பட்ட தங்களது குறைந்தவிலைப் புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு – 57(7)இன் கீழ் தொடர்ந்து முடிக்க உள்ளூர் விலைபுள்ளிக் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது விபரம் வருமாறு.

| SL.No | விலைப்புள்ளித்தாரர் | மதிப்பீடுதொகை |
|---|---|---|
| 1. | S. ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM | 8284.00 |
| 2. | M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI | 8416.00 |
| 3. | RDR CONSTRUCTION NO.2 RAMASAMY STREET, PANRUTI | 8594.00 |

மேற்படி, மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய S. ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து அளிக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை மேற்கொள்ள அனுமதித்ததையும் மேற்படி தங்களது குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022, பிரிவு – 57(7) கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. இப்பணிக்கான குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள S. ARUNA VILLUPURAM என்ற ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் நகராட்சிகளின் சட்ட விதிகள் 2022, பிரிவு – 57(7) ன் கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மன்றம் பதிவு செய்யலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண்.1628/2025/இ1)

22. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய்நிதி 2025–26ன் கீழ் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32 ஆ.ஆண்டிக்குப்பம் நகராட்சி துவக்கப்பள்ளி பகுதியில் உள்ள சத்துணவு மையம் சிறுபழுது நீக்கம் (Minor Repair) செய்யும் பணிக்கு மதிப்பீடுதொகை ரூ.0.10/– இலட்சத்திற்கு பெறப்பட்ட தங்களது குறைந்தவிலைப் புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம் 2022, பிரிவு – 57(7)இன் கீழ் தொடர்ந்து முடிக்க உள்ளூர் விலைபுள்ளிக் கோரியதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது விபரம் வருமாறு.

| SL.No | விலைப்புள்ளித்தாரர் | மதிப்பீடுதொகை |
|---|---|---|
| 1. | S. ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM | 8284.00 |
| 2. | M.PARTHIBAN,NO.239/2,GANDHI ROAD, PANRUTI | 8416.00 |
| 3. | RDR CONSTRUCTION NO.2 RAMASAMY STREET, PANRUTI | 8594.00 |

மேற்படி, மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய S. ARUNA NO.142 VPS GARDEN PANAMPATTU ROAD, VILLUPURAM என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து அளிக்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று இப்பணியினை மேற்கொள்ள அனுமதித்ததையும் மேற்படி தங்களது குறைந்த விலைப்புள்ளியை அங்கீகரித்து பணியின் அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 2022, பிரிவு – 57(7) கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. இப்பணிக்கான குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள S. ARUNA VILLUPURAM என்ற ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கியதற்கும் நகராட்சிகளின் சட்ட விதிகள் 2022, பிரிவு – 57(7) ன் கீழ் பணி மேற்கொண்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மன்றம் பதிவு செய்யலாம்.
3. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ. எண்.1628/2025/இ1)

23. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 23 பண்ருட்டியார் நகர் பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் பாதி உடைந்து மிகவும் பழுதடைந்து உள்ளது. எனவே அந்த பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு மிகவும் சிரமாக உள்ளதால் மழைகாலங்களில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 8.80/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

24. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 23 பாவாடைப்பிள்ளை தெரு சந்து மற்றும் வானுவர் தெரு பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால் மிகவும் சேதமடைந்து உள்ளது. மழைகாலங்களில் மழைநீர் அப்பகுதியில் உள்ள வீடுகளில் நுழைவதால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே மழைகாலங்களில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்கு புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ. 7.60/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

25. பண்ணுருட்டி நகராட்சி – கல்வி நிதி 2025–26ன் கீழ் அனைத்து அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகள் மாணவர்கள் எழுதி பழக பச்சை நிற செராமிக் முலாம் பூசப்பட்ட பலகை பொருத்தி அங்கன்வாடி மாணவர்களுக்கு சுமார் 260 எண்ணிக்கையில் எழுதுபலகை அமைக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 16.50/– இலட்சத்திறகு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு கல்வி நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

26. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 31 தேவநாத சுவாமி மெயின் சாலை மற்றும் லிங்க் ரோடு குறுக்குத் தெரு சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட சாலைகளுக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 11.50/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

27. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் பொறியியல் பிரிவு பொறியாளர் ஈப்பு வாகனத்தின் (TN–31 AH 7374) நான்கு டயர்களும் மிகவும் பழுதடைந்துள்ளதால் புதிதாக நான்கு டயர்கள் மாற்றுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 30,000/– ரூபாய் முப்பது ஆயிரத்திற்கு டயர்கள் வாங்கி பொருத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

28. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 03 விழமங்கலம் வ.ஊ.சி தெரு பகுதியில் உள்ள சமுதாயக்கூடம் மிகவும் பழுதடைந்துள்ளதை புதுப்பித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5.00/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

29. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 23 சேக்கிழார் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மிகவும் சேதமடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மகவும் சிரமத்தில் உள்ளது. எனவே அப்பகுதியில் புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 5.00/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

30. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 27 மற்றும் வார்டு எண். 06 பஞ்சவர்ணம் நகர் மற்றும் அம்பேத்கர் நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு மேற்கூரை தட்டு ஓடு மற்றும் வளாகத்தை சுற்றியுள்ள பகுதிக்கு சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 8.90/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

31. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 02 விழமங்கலம் திரௌபதி அம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மிகவும் சேதமடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மகவும் சிரமத்தில் உள்ளது. எனவே அப்பகுதியில் புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 10.20/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

32. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 25 தட்டாஞ்சாவடி காந்தி நகர் பகுதியில் கருமகாரிய மண்டபம் கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று பொதுமக்கள் உங்களுடன் ஸ்டாலின் மனுவிலும் வார்டு அளவிலான சிறப்பு கூட்டங்கள் 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய தினங்களில் நடத்தப்பட்ட வார்டு சபா கூட்டத்திலும் தெரிவித்ததின் அடிப்படையில் இடம் நேரில் ஆய்வு செய்து கருமகாரிய மண்டபம் கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 10.00/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

33. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 16 மேலப்பாளையம் பாட்டை பிரதான தெரு மற்றும் நேதாஜி நகர் பிரதான தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மிகவும் சேதமடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மகவும் சிரமத்தில் உள்ளது. எனவே அப்பகுதியில் புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ.13.00/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

34. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் வார்டு எண். 07 அ.பா சிவராமன் நகர் மெயின் தெரு மற்றும் வார்டு எண். 06, PTS மணி நகர் மெயின் தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மிகவும் சேதமடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மகவும் சிரமத்தில் உள்ளது. எனவே அப்பகுதியில் புதிய மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 12.80/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

35. பண்ணுருட்டி நகராட்சி – வருவாய் நிதி 2025–26ன் கீழ் பண்ணுருட் நகராட்சியில் உள்ள (BOV Vehicle) பழுதுபார்தல் மற்றும் பராமரிப்பு பணிக்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 10.50/– இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கு வருவாய் நிதி 2025–26ன் கீழ் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(கோ. எண். /2025/இ1)

**36.** இந்நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து பணிமாறுதல் பெற்று **30.06.2022–ல்** விழுப்புரம் நகராட்சியில் பணி ஒய்வு பெற்றுள்ள திரு. ஜெ.எஸ். அலி அவர்கள் பண்ணுருட்டி நகராட்சியில் தணிக்கை பத்திகள் நிலுவையில் இருந்ததால் தனக்கு ஒய்வு கால பணப்பயன்கள் வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.Contemé Petition No. **2675/2025** in **W.P.No.32885/2022–ல் வழக்கு** தொடரப்பட்டு நாள் 28.06.2023–ல் தீர்ப்பு வரப்பெற்றுள்ளதால் மேற்படி வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.**30,000/–**ம் வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. பி. ஆனந்தகுமார், அரசு வழக்கறிஞர், சென்னை அவர்களிடம் இருந்து **10.11.2025–ல்** கடிதம் வரப்பெற்றுள்ளது மேற்படி வழக்கிற்கு உரிய வழக்கறிஞர் கட்டணம் ரூ. **30,000/–** ம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u> – **1.** மன்றம் அனுமதிக்கலாம்

**2.**மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.

கோ. எண். **1762/2019**/சி1

37. பண்ணுருட்டி நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து பணிமாறுதல் பெற்று வயது முதிர்வின் காரணமாக **30.06.2022–ல்** பணி ஒய்வு பெற்றுள்ள திரு. ஜெ.எஸ்.அலி அவர்களுக்கு தணிக்கை பத்திகள் நிலுவை இருந்த காரணத்தினால் ஒய்வூதிய பயன்கள் வழங்காத நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.32885/2022–ல் **வழக்கு தொடரப்பட்டு** 28.06.2023–ல் **தீர்ப்பு வழங்கப்பட்டது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு தீர்ப்பில்** 1 **மற்றும்** 6**வது பிரதிவாதிகள் தனியருக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பணப்பயன்களில் இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடை தொகையில்** ( DCRG) **10% சதவீதம் மற்றும் இதர பணப்பயன்களில்** (COMMUTATION) **6% சதவீதம் வட்டியுடன் சேர்த்து வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது**.இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் தெளிவுரை வழங்க கோரப்பட்டதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். **26828/2023/கே1** நாள்.**22.12.2025** –ல் அனுமதி பெறப்பட்டு திரு.ஜெ.எஸ்.அலி, இளநிலை உதவியாளர் ஒய்வு விழுப்புரம் நகராட்சி அவர்களுக்கு வட்டித்தொகை **01.07.2022** முதல் **30.11.2025** வரை **41** மாதங்களுக்கு நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுளள்வாறு இறபபு மற்றும் ஒய்வுகால பணிக்கொடை தொகையில் **(DCRG 10%) ரூ.363793/– மற்றும் இதர பணப்பயன்களில் (Commutation 6%) ரூ.179047/- ஆகமொத்தம் வழங்க வேண்டிய வட்டி தொகை ரூ. 542840/–திரு.ஜெ.எஸ்.அலி, இளநிலை உதவியாளர், விழுப்புரம் நகராட்சி ஓய்வு அவர்களுக்கு** வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோ. எண். **1762/2019/சி1**

**38.** இந்நகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து **03.07.2024–ல்** லஞ்சஒழிப்பு துறையால் கைதுசெய்யப்பட்டு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட திரு. வி. கதிரவன் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P.No. **49852** of **2025** –ல் வழக்கு தொடர்ந்துள்ளதற்கு பண்ணுருட்டி நகராட்சி சார்பாக திரு. சி. செல்வராஜ், கூடுதல் அரசு வழக்கறிஞர், சென்னை அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்தி தருவதற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. **25000/–**ம் வழங்க கோரி **29.12.2025–ல்** கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையை வழக்கறிஞருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – **1.** மன்றம் அனுமதிக்கலம்
**2.**மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

கோ.எண். **1357/2024/சி1**

39. **பண்ணுருட்டி நகராட்சியில் இந்திய தாய்திருநாட்டின் குடியரசு தினவிழாவினை** 26.01.2026–ல் **மிகவும் சிறப்பாக கொண்டாடும் பொருட்டு அழைப்பிதழ்கள் அச்சடிக்கவும், கொடி தோரணங்கள் வாங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**7000/– **ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு**–1.மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண்.**2641/2024/**சி1**

40. மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் அவர்களின் கடித ந.க. எண்:வி8/2803768/2024 நாள்: 18.10.2025–ம் தேதிய கடிதத்தில் பண்ணுருட்டி வட்டம், திரு.வெங்கடசாமி மகன் புருஷோத்தமன் என்பவர் வார்டு–B , பிளாக்–55, நகரளவு எண்:41/2A1–ல் 00203 ச.மீ இடம் கணினியில் பதிவேற்றம் செய்ததில் சர்க்கார் புறம்போக்கு என தவறுதலாக பதிவாகி உள்ளதாகவும், அதனை திருத்தம் செய்ய நகர் மன்ற தீர்மானம் இயற்றி அதன் நகலை அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரசார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் 05.01.2026–ம் தேதிய குறிப்பில் வார்டு–B, பிளாக்–55, TS.NO: 41/2A1–ல் 00203–ச.மீ, பரப்பளவு இடம் சர்க்கார் புறம்போக்கு என உள்ளதை திரு.கோவிந்தராஜலு மகன் வெங்கடசாமி, பெயருக்கு வகைபாடு மாற்றம் செய்து தனி பட்டா வழங்கலாம் என தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்டவாறு மாற்றம் செய்யவும் தடையின்மை சான்று அனுப்பி வைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> :மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்:2197/2025/F1)

41. மாவட்ட ஆட்சி தலைவர் கடலூர் அவர்களின் கடித ந.க.எண்: வி8/3396568/2025 நாள்: 24.10.2025–ம் தேதிய கடிதத்தில் பண்ணுருட்டி வட்டம், திரு.வேலுமணி த/பெ சுப்புராயலு என்பவர், வார்டு–A , பிளாக்–26, நகரளவு எண்:24/1–ல் 0.0400 ச.மீ இடம் திரு.சுப்புராயலு செட்டியார் மகன் சிவமணி மற்றும் வேலுமணி பெயரில் உள்ளது. மேற்படி புல எண்களை கணினியில் பதிவேற்றம் செய்ததில் சர்க்கார் புறம்போக்கு என தவறுதலாக பதிவாகி உள்ளதாகவும் அதனை திருத்தம் செய்ய நகர் மன்ற தீர்மானம் இயற்றி அதன் நகலை அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரசார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் 05.01.2026–ம் தேதிய குறிப்பில் வார்டு–A, பிளாக்–26, TS.NO: 24/1–ல் 00400–ச.மீ, பரப்பளவு இடம் சர்க்கார் புறம்போக்கு என உள்ளதை திரு.சுப்புராயலு செட்டியார் மகன் சிவமணி மற்றும் வேலுமணி என்பவர்களின் பெயருக்கு வகைபாடு மாற்றம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்டவாறு மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்:2102/2025/F1)

42. மாவட்ட வருவாய் அலுவலர், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்: வி8/3675256/2025 நாள்: 24.12.2025–ம் தேதிய கடிதத்தில் பண்ணுருட்டி வட்டம், பண்ணுருட்டி மஸ்ஜிதே முபாரகா சுன்னத் ஜமாஅத் பள்ளிவாசல், வார்டு–A , பிளாக்–31, நகரளவு எண்: 7–ல் 0.0574 ச.மீ இடம் கணினியில் பதிவேற்றம் செய்ததில் சர்க்கார் பும்போக்கு என தவறுதலாக பதிவாகி உள்ளதாகவும் அதனை திருத்தம் செய்ய நகர் மன்ற தீர்மானம் இயற்றி அதன் நகலை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரசார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வர் அவர்களின் 05.01.2026–ம் தேதிய குறிப்புகளில் மேற்கண்ட விவரப்படியான இடம் ஆய்வு செய்ததில் ரயத்து புஞ்சை பள்ளிவாசல் என பதிவாகி உள்ளது எனவும், மனுதாரருக்கு ரயத்து புஞ்சை என வகைபாடு மாற்றம் செய்து பள்ளிவாசல் பெயரில் பட்டா மாற்றம் செய்திட தடையின்மை சான்று வழங்கலாம் என தெரிவித்துள்ளார்கள். எனவே மேற்கண்டவாறு மாற்றம் செய்து தடையின்மை சான்று அனுப்ப மன்றம் அனுமதி வேண்டபடுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்:2573/2025/F1)

43. பண்ருட்டி நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2024–25ன் கீழ் புதிய கடைகள் கட்ட திட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது அதன்படி கட்டுமான பணிகளை செயல்படுத்துவதற்கு எதுவாக கடைகளை 28.07.2025 க்குள் கடைகளை காலி செய்ய அறிவிப்பு வழங்கப்பட்  டது மேற்படி அறிவிப்பினை எதிர்த்து அங்கு கடை வைத்துள்ள குத்தகைதாரர்களால் சென்னை உயர்நிதிமன்றத்தில் வழுக்குகள் தொடரப்பட்டுள்ளது WP/30078/2025, WP/30077/2025, WP/30085/2025, WP/30088/2025, WP/33038/2025, WP/33041/2025, WP/33044/2025 ,WP/33046/2025, WP/33047/2025, WP/33050/2025, WP/33051/2025, WP/33054/2025, WP/33058/2025, WP/33059/2025, WP/32431/2025, WP/32436//2025, WP/32439/2025, WP/32440/2025, WP/32445/2025, WP/32776/2025, WP/34008/2025,, WP/34014/2025 WP/34015/2025, WP/34017/2025, WP/34012/2025, WP/38171/2025, WP/38180/2025, WP/38181/2025, WP/38179/2025, WP/38178/2025 மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.3.00 லட்சம் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வழக்கின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1605/2024/அ1

44. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் நவீன எரிவாயு தகனமேடையில் சடலங்களை எரியூட்டவும், பராமரிப்பு பணி மேற்கொள்வதற்கும் மல்லிகை ஆண்கள் சுய உதவிக்குழு ஒப்பந்த முறையில் செய்து வருகிறது. ஒப்பந்த காலம் 31.12.2025 உடன் முடிவடைந்ததையொட்டி தன்னார்வ தொண்டு நிறுவனங்களை நியமிக்கும் பொருட்டு தினகரன் நாளிதழில் 31.12.2025 தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் எந்த ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனமும் முன் வரவில்லை எனவே ஏற்கனவே பணிசெய்து வரும் மல்லிகை ஆண்கள் சுய உதவிக்குழுவின் பணியினை மேலும் மூன்று மாதத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.11.00/– லட்சம் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.904/2020/எச்2)

**45.** இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள மற்றும் இறந்த பணியாளர்களுக்கு **1974**–ம் ஆண்டு முதல் பிற்கால சேமநலநிதிக்கான வட்டி தொகை கணக்கீடு செய்து வழஙகப்படாமல் உள்ளதால் **2020–2021** வரை கணினியில் வட்டிதொகை கணக்கீடு செய்து வழஙகுவதற்கு தோராய செலவினம் ரூ. **6.00** இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண். **559** நாள். **21.02.2024**–ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனைதொடர்ந்து தற்போது வட்டி கணக்கீடு செய்யும் பணிகள் முடிக்கப்பட்டு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை கடலூர் அவர்களின் வழியாக சிறப்பு இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை, சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி முடிக்கப்பட்டதால் பட்டியல் தொகை வழஙக கோரி திரு. T. Hariprasath நிறுவனம் தருமபுரி அவர்களிடம் இருந்து **26.11.2025**–ல் தொகை வழஙக கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே ஏற்கனவே அனுமதி பெற்ற தொகைக்கு கூடுதல் தொகையாக ரூ. **2.00** இலட்சம் தேவைப்படுவதால் கூடுதல் செலவினம் ரூ. **2.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

கோ. எண். 2322/2023/சி1

46. இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவில் புதிதாக வாங்கி பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2026-2027 ஆண்டுக்கு காப்பீடு தொகை செலுத்த வேண்டியுள்ளது.

| வ.எண் | வாகன வகை | வாகன எண் |
|---|---|---|
| 1 | TATA ACE | TN31 CS6417 |
| 2 | TATA ACE | TN31 CS6426 |
| 3 | TATA ACE | TN31 CS6494 |
| 4 | TATA ACE | TN31 CS6476 |
| 5 | TATA ACE | TN31 CS6420 |
| 6 | TATA ACE | TN31 CS6451 |
| 7 | TATA ACE | TN31 CS6436 |
| 8 | TATA ACE | TN31 CS6468 |
| 9 | JCB | TN31 H8253 |
| 10 | MINI JCB | TN31 CU8298 |

United India Insurance Company Limited நிறுவனத்திற்கு காப்பீடு தொகை செலுத்த ஆகும் தோராய செலவினம் ரூ.3.00/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(கோப்பு எண்: 1176/2025/எச்2)

**47.** பண்ணுருட்டி நகராட்சியில் நடைபெற்ற பணிகள் சம்மந்தமாக நீண்ட காலமாக பணியாளர்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கு ஒப்பந்தாரர்களால் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. **1,80,42,382/-** செலுத்தப்படவில்லை என தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனம், மண்டல அலுவலகம், திருச்சி **-8** அவர்களின் கடிதம் No. CB/TRY/ENF/C2/81713/8F ORDER/1/2025-26 நாள். 23.10.2025 கனரா வங்கிக்கு மேற்கண்ட தொகையை விடுவிக்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. அதனைதொடர்ந்து கனரா வங்கி கிளை மேலாளர் அவர்களால் ஆணையர் பெயரில் கனரா வங்கியில் பராமரிக்கப்பட்டு வரும் வங்கி கணக்கு எண். **2754101002852** உள்ள தொகையினை முடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு தீர்ப்பின் பேரில் தடையாணை பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். எண்.**320/2025-ல்** தொடரப்பட்டது.

இந்த வழக்கு **05.12.2025-ல்** பட்டியலில் இடம் பெற்று விசாரணைக்கு வரப்பெற்றதில் **25%** சதவீதம் மதிப்பிடப்பட்ட தொகையாக செலுத்த நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து ரூ. **1,80,42,382/-ல் 25%** சதவீதம் தொகை ரூ. **45,10,596/-** அவசர அவசியம் கருதி உதவி தொழிலாளர் சேமநலநிதி ஆணையர் அலுவலகம், திருச்சி அவர்களுக்கு வரைவோலையாக செலுத்தியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்

கோ. எண். **209/2025/**எச்**1** (பி**1**)

**48.** பண்ணுருட்டி நகராட்சியில் **2024-2025-ம்** ஆண்டிற்கான தணிக்கை நடைபெற்று வருவதால் இவ்வாண்டிற்கான கணக்குகளை முடித்து தணிக்கைக்கு சமர்பிக்க வேண்டிய நிலை உள்ளதால் வெளிநபரின் மூலம் கணக்குகள் முடிப்பதற்கும் அதற்கான செலவினம் மேற்கொள்வதற்கு தோராய செலவினமாக ரூ. **2.75** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

கோ. எண். **/2026/**பி**1**

49. 2026-ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் அறிவுரைப்படி தமிழ்நாட்டில் 2026-ல் சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் (பாகம் எண். 209 முதல் 273 வரை) உள்ள வாக்காளர்களுக்கு வாக்களிப்பதின் முக்கியதுவத்தை உணர்த்தும் வகையில் பொதுமக்களுக்கு விழிபுணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆட்டோ விளம்பரம் , டிஜிட்டல் பேனர்கள், துண்டுபிரசுரங்கள் அச்சிடுவதற்கும், ஸ்டேஷ்னரி (டோனர்கள், பேனா, பென்சில், வெள்ளை தாள், ஜெராக்ஸ்) மற்றும் இதர அத்தியாவசிய செலவினங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி இதற்கான தோராய செலவினம் ரூ.4.00/- (நான்கு இலட்சம்) நகராட்சி வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

கோ. எண். 1972/2025/F1

50. இந்நகராட்சியில் பொது பிரிவு, பொது சுகாதார பிரிவு, வருவாய் பிரிவு, மற்றும் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கணினிகளுக்கு உள்ள பிரிண்டர்களுக்கு அடிக்கடி டோனர் தேவைப்படுவதாலும் மற்றும் கோப்புகள் தயார் செய்து அதனை பிரிண்ட் செய்வதற்கு தேவையான டோனர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் டோனர்கள் வாங்குவதற்கும் மற்றும் கணினி பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் தோராய செலவினம் **ரூ.1.50** இலட்சத்திற்கு (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டில்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

கோ. எண். /2026/பி1

51. பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குள் அமைந்திருக்கும் கெடிலம் ஆற்றில் நடைபெறும் ஆற்றுத் திருவிழாவிற்கு ஆண்டுதோறும் தற்காலிக கடைகள் வாகனங்கள் ஆகியவற்றிற்கு நகராட்சி பொது ஏல நிபந்தனைகளின்படி கட்டணங்கள் வசூலிப்பதற்கு பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. 19.01.2026 ம் நாளன்று ஆற்றுத் திருவிழா நடைபெற உள்ளதால் இவ்வாண்டும் கீழ்கண்ட விவரப்படி உள்ள தொகைகளுக்கு **19.01.2026 ஒரு நாள் மட்டும்** கட்டணம் வசூல் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் பொது ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>கட்டண விவரம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | சைக்கிள் ஒன்றுக்கு | ... | ரூ.5.00 |
| 2 | மொபட் ஒன்றுக்கு | ... | ரூ. 10.00 |
| 3 | கட்டை வண்டி மற்றும் டயர் வண்டி ஒன்றுக்கு | ... | ரூ. 15.00 |
| 4 | கார் மற்றும் இதர வாகனங்கள் ஒன்றுக்கு | ... | ரூ. 25.00 |
| 5 | 5x2 = 10 சதுர அடியில் அமைந்துள்ள கடை ஒன்றுக்கு ( 10 சதுரடிக்கு மேல் கடை ஒன்றுக்கு – ரூ. 50.00) | ... | ரூ.50.00 |
| 6 | சாப்பாடு வைத்து விற்கும் கூடை ஒன்றுக்கு | ... | ரூ. 100.00 |
| 7 | பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை ஒன்றுக்கு | ... | ரூ. 25.00 |
| 8 | வளையல் கடை ஒன்றுக்கு | ... | ரூ. 25.00 |
| 9 | இனிப்பு பலகார கடை ஒன்றுக்கு | ... | ரூ. 50.00 |
| 10 | டீ கடை ஒன்றுக்கு | ... | ரூ 100.00 |
| 11 | பட்டாணி, பேரிச்சை , மொச்சை கடை ஒன்றுக்கு | ... | ரூ. 50.00 |
| 12 | தேங்காய், பழம், கற்பூரம் விற்பனை ஒன்றுக்கு | ... | ரூ.50.00 |
| 13 | புத்தக கடை ஒன்றுக்கு | ... | ரூ. 50.00 |
| 14 | சோடா கலர் விற்பனை கடை ஒன்றுக்கு | ... | ரூ. 50.00 |
| 15 | கரும்பு விற்பனை கடை ஒன்றுக்கு | ... | ரூ. 50.00 |
| 16 | கிழங்கு வகை கடை ஒன்றுக்கு | ... | ரூ. 50.00 |
| 17 | மேற்காணும் கடைகள் தவிர்த்து வரும் இதர கடைகள் ஒன்றுக்கு | ... | ரூ. 25.00 |
| 18 | வாழைப்பழம் ஏலம் விடுதல் ஒரு வண்டிக்கு | ... | ரூ. 50.00 |
| 19 | ஐஸ் வண்டிக்கு | ... | ரூ. 25.00 |

கோ. எண். 73/2023/அ1

<u>அலுவலக குறிப்பு</u> – 1.மன்றம் அனுமதிக்கலாம்.

51. நகர் மன்ற தீர்மானம் எண்.919 நாள். 25.09.2025 –ன் படி பண்ணுருட்டி நகராட்சி பாரதி அங்காடி கடை எண்.27 வரி விதிப்பு எண்.095/626 குத்தகை உரிமத்தினை தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தால் குத்தகை உரிமைதாரர் திருமதி. சண்முக வள்ளி க/பெ பழனி என்பவர் கோரியுள்ளார். அதன் படி குத்தகை இரத்து செய்து மேலும் மேற்கண்ட கடைக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்த புள்ளி கோரவும் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் படி மேற்கண்ட கடைக்கு குறுகிய கால ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப் புள்ளி வரப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | திரு. சிற்றரசு<br>த/பெ அன்பழகன்,<br>கிழக்கு தெரு,<br>அங்கு செட்டியாளையம்,கடலூர். | ரூ.3200/- |

| | | |
|---|---|---|
| 2 | திரு. முருகன்<br>த/பெ ஜெயராம்,<br>முத்தைய நகர்,<br>கொக்குபாளையம்,பண்ணுருட்டி. | ரூ.3222/- |

**மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் அதிக தொகை கோரிய சிற்றரசு த/பெ அன்பழகன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலக குறிப்பு** :மன்றம் அனுமதிக்கலாம்.

இடம் –நகராட்சி அலுவலகம்
நாள்– **06.01.2026**

நகரமன்ற தலைவர்,
பண்ணுருட்டி நகராட்சி.